# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2007 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்*

---

*(2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, ஏப்பிறல் மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்**

[2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 2/2007

**2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தையும் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற் கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

பாகம் I

**2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்**

**2.** (இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும் 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதி (மோட்டார் வாகன சலுகை அறவீடு) சட்டத்தின் பாகம் I அதன் 2 ஆம் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை அதன் (ஆ) (i) என்னும் பந்தியாக மீள எழுத் திடுவதன் மூலமும் ;

(2) மீள எழுத்திடப்பட்ட (ஆ) (i) என்னும் பந்தியைப் பின் வருமாறு திருத்துவதன் மூலமும் :—

(i) "தனியாள் ஒவ்வொருவரிடமிருந்தும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " 2006, மாச்சு 31 ஆந் தேதி தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்குத் தனியார் ஒவ்வொருவரிடமிருந்தும் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) "வரிகளினதும் அறவீடுகளினதும் கூட்டு மொத்தத்தில் " என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் :—

"அத்தகைய தனியாள் கடன் பத்திரம் ஒன்றைத் திறப்பதன் மூலம் இறக்குமதி நடைமுறையைத் தொடங்கியிருக்குமிடத்து, வரிகளினதும் அறவீடுகளினதும் கூட்டு மொத்தத்தில் ";

(3) மீள எழுத்திடப்பட்ட (ஆ) (i) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

" (ii) இச்சட்டம் தொடங்கும் தேதியிலுருந்தும் அதன் பின்னரும், மேற்படி (i) ஆம் பந்தியின் நியதிகளின்படி அதில் குறிப்பிடப்பட்ட இச்சலுகையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளாத ஒவ்வொரு தனியாளிடமிருந்தும் அல்லது 2001, ஏப்பிறல் 1 ஆந் தேதி தொடங்கும் தொடர்ச்சியான எவையேனும் ஐந்து வரி மதிப்பீட்டு ஆண்டுகள் தொடர்பில், விடயத் திற்கேற்ப 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2006ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்று தொடர்பிலும் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாத (ரூபா 250,000/-) தொகையொன்றைக் கொண்ட வருமான வரியை செலுத்தியுள்ளவரும் ஆணையாளர் தலைமையதிபதியால் அவ்வாறு சான்றுபடுத்தப் பட்டுள்ளவருமான, அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையால் அனுமதிக்கப்பட்டவாகனமொன்றாகத் தீர்மானிக்ககப்படக் கூடியவாறான பிரிவொன்றுக்குட்பட்ட மோட்டார் வாகனமொன்றை

இறக்குமதி செய்யும் தனியாள் ஒவ்வொருவரும், அத்தகைய இறக்குமதியின் நேரத்தில் சுங்கக் கட்டளைச் சட்டத்தினதும் (அத்தியாயம் 235), 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும் அத்துடன் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தினதும் நியதிகளின்படி அத்தகைய தனியாள் செலுத்துவதற்காளாகும் ஏதேனும் வரியின் அல்லது பண அறவீட்டு கூட்டுமொத்தத்தின்மீது, அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தின்படி அல்லது வீதங்களின்படி கணிப்பிடப்பட்ட, இப்பாகத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீட்டை அத்தகைய இறக்குமதியின் நேரத்தில் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(iii) இப்பாகத்தின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளின் நோக்கங்களுக்காக, "இச்சட்டம் தொடங்கும் தேதி" என்னும் சொற்றொடரானது, 2007 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வரும் தேதி என்று பொருள்படும். " ; அத்துடன்

(4) இப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(3) ஐந்து ஆண்டுகளைக் கொண்ட காலப் பகுதியைக் கணிப்பிடுகையில் ஒருமுறை கணக்கிற்கெடுக்கப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு அதன்பின்னர் ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியைக் கணிப்பிடுகையில் கருத்திற் கொள்ளப்படுதலாகாது.".

**3.** இச்சட்டத்தால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 அம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) (i) ஆம் பந்தியில் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும், 2006, மாச்சு 31 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். கடந்த காலத்தை உள்ளடக்கியதாக நடைமுறைக்கு வருதல்.

## பாகம் II

### 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் III என்பதனைத் திருத்துதல்

*2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் III என்பதனைத் திருத்துதல்.*

**4.** இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதி (நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு) சட்டத்தின் பாகம் III இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பாகத்தின் 14 ஆம் பிரிவில் "( நிபமஅநி என இதனகத்துப்பின்னர் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :—

(2) அப்பாகத்தின் 15 ஆம் பிரிவில் -

(அ) " நிபமஅ நிறுவனத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில் "நிபமஅநி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பாகத்தின் 17 ஆம் பிரிவில் "நிபமஅநி " என்னும் சொல்லுக்குப் பதிலாக, " உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பாகத்தின் 18 ஆம் பிரிவில் "நிபமஅநி" இயைபான ஒப்பந்தக்காரர்களினால் 2005, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்தின்மீதுமான மொத்த விற்பனை வரவு தொடர்பாக அதனால் சேகரிக்கப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணையாளர்

தலைமையதிபதி இயைபான ஒப்பந்தக்காரர்களினால் 2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்தின்மீதுமான மொத்த விற்பனை வரவு தொடர்பாக அவரால் சேகரிக்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பாகத்தின் 19 ஆம் பிரிவில் அதன் உட்பிரிவுகள் (2), (3), (4), (5) அத்துடன் (6) என்பவற்றில் "நிபமஅநி" என்னும் சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(6) அதன் 20 ஆம் பிரிவில் -

(அ) "நிர்மாண ஒப்பந்தக்காரர் " என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னராகப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்பது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) "நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகம் (நிபமஅநி)" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்வதன் மூலமும் ;

(7) அதன் 22 ஆம் பிரிவில் அப்பிரிவின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"இப்பிரிவின் நோக்கங்களுக்காக "நிபமஅநி" என்பது 1957 ஆம் ஆண்டின் 49 இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 3 ஆம்

பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு, 1992, யூன் 10 ஆம் தேதிய 718/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைத்து உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட கைத்தொழில் பொறுப்பு முயற்சியொன்றாகிய நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகம் என்று பொருள்படும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*